LAW & SOCIETY TRUST

අප්‍රියල් 2022

# පශ්චාත් කෝවිඩ් ශ්‍රී ලංකාව තුළ අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ

සංක්ෂිප්ත ප්‍රතිපත්ති සටහන

නීතිය හා සමාජ භාරය අධ්‍යාපනය මත කෝවිඩ්-19න් ඇති වූ බලපෑම සහ එමගින් අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ පෙර සිටම පැවති අසාධාරණකම් වඩාත් උග්‍ර කළ අන්දම පිළිබඳව ලේඛනගත කර තිබේ. පශ්චාත්-වසංගත ලෝකයකට යෑමේදී වැදගත් වෙතැයි අප සිතන අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ කිහිපයක් මෙම සංක්ෂිප්ත ප්‍රතිපත්ති සටහන හරහා අපි ඉදිරිපත් කරන්නෙමු. අධ්‍යාපනය සම්බන්ධයෙන් අප වඩාත්ම සැලකිලිමත්වන්නේ සාධාරණත්වය පිළිබඳවයි. රටේ අගුළුදැමීම් සිදුවනවිට හා 'මාර්ගගත (online) අධ්‍යාපනයට' මාරුවීම ප්‍රකාශයට පත් කළවිට, රටේ සියළුම සිසුන්ට එය බලපෑවේ එකම ආකාරයට නොවේ. වසංගතයෙන් අධ්‍යාපන පද්ධතියට අතිවිශාල කම්පනයක් එල්ල කළ අතර, ඉන් වඩාත්ම වැඩියෙන් බලපෑමට ලක් වූයේ අධ්‍යාපන පද්ධතියේ ඒ වනවිටත් පැවති අසාධාරණකම් හේතුවෙන් වැඩියෙන්ම පීඩාවට ලක්වෙමින් සිටි අය යි. පාසල් වර්ගීකරණය කිරීම සඳහා විවිධාකාර ප්‍රවේශ යොදගනිතත් ඒ සියල්ලෙන්ම ඍජුවම හෝ වක්‍රාකාරයෙන් පිළිගන්නේ පාසල්වල ඇති සම්පත් අසමාන බවයි. එවන් ඌණ-සම්පත් සහිත පාසල්වල සිසුසිසුවියන් මේ වසංගතයේ අන්ත ම බලපෑමට ලක්වූ බවට සැකයක් නැත. අධ්‍යාපනයට කරන ඕනෑම ප්‍රතිසංස්කරණයක් හරහා වඩාත් පුළුල් පද්ධතිගත වෙනස්කම් සිදුකිරීමට අමතරව, වසංගතයෙන් ඍජුවම බලපෑමට ලක් වූ අය සඳහා එහි විධිවිධාන ඇතුළත් විය යුතු ය. එවන් පද්ධතිගත වෙනස්කම් හරහා අනාගතය සලකාබැලීම පමණක් නොව අතීතයේ සිදුවූ අසාධාරණකම් පිළිබඳව ද සලකා බැලිය යුතු වේ.

ශ්‍රී ලංකා අධ්‍යාපන සංසදයේ කාර්යයන් මෙන්ම, අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ සඳහා වන ජනාධිපති කාර්යසාධක බලකායේ වාර්තාව අප මෙහිදී පිළිගැනීමට ලක් කරන අතර, ඉන් අපි පෙළඹුම් ලැබුවෙමු. එම වාර්තාව ප්‍රකාශනයට පත් කිරීමෙන් පසුව සම්මත කරගත් ජාතික අයවැය එකක හෝ එම වාර්තාවේ ලබා දී තිබුණු නිර්දේශ ප්‍රමාණවත් තරමින් සලකා බලා නොතිබීම අප කණගාටුවට පත් කරයි. වර්තමානයේදී පාර්ලිමේන්තුව නියෝජනය කරන ප්‍රධාන දේශපාලන පක්ෂ අතරින් තමන්ගේ වෙබ් අඩවියේ අධ්‍යාපන ප්‍රතිපත්තියක් පල කර ඇත්තේ ජාතික ජන බලවේගය (NPP) පමණි. ඉන් ද අපි අදහස් ලබාගත්තෙමු. මේ යෝජනාවලියට අපෙන් ලබාදුන් විශේෂ දයකත්වය වන්නේ දරිද්‍රතාවයෙන් අධ්‍යාපනය මත ඇති කරන පරම්පරාමය සහ වක්‍රීය බලපෑම පිළිගැනීමට ලක් කරමින් මේ යෝජනාවලට සමාජ ආර්ථික යුක්ති මානයක් එක් කිරීමයි.

### කෝවිඩ්-19 පරම්පරාව

- වසංගතය හේතුවෙන් පාසල් නොපැමිණීමට යොමු වූ සිසුසිසුවියන් කවුරුන්දැයි හඳුනාගැනීමට රජය විසින් ප්‍රෝත්සාහීව කටයුතු කළයුතු අතර, ඔවුන් නැවතත් පාසලට පැමිණෙන බව සහතික කරගැනීම සහ අධීක්ෂණය කිරීම සඳහා වැඩසටහන් ක්‍රියාත්මක කරන්නට පටන් ගතයුතුව තිබේ. පාසල් යන වයසේ ළමුන් වසංගතයෙන් පසුව රැකියා කරන්නට හෝ විවාහ වන්නට යොමුවී ඇත්තේ නම්, එවන් ළමුන්ගේ යහපත ආරක්ෂා කෙරෙන බව රජය විසින් සහතික කරගත යුතුය. කෝවිඩ් තත්වයෙන් පසුව ආපසු අධ්‍යාපනය ලබාගැනීමට එන ළමුන්, ඔවුන් අධීක්ෂණය හා ඔවුන්ට සහය ලබාදීම සඳහාම පත්කල පුද්ගලයින්ගේ විශේෂ අධීක්ෂණය සහ සහය ලැබිය යුතුය.

- වසංගතයෙන් සැලකියයුතු ලෙස බලපෑමට ලක්වූ පාසල් සහ සිසුන්, එසේ බලපෑමට ලක් නොවූ පාසල් හා සිසුන් අතරින් වෙන් කර හඳුනාගැනීම කඩිනමින් කළයුතු කාර්යයක් වශයෙන් සලකා ඒ සඳහා ක්‍රමවේදයක් සහ යන්ත්‍රණයක් සකස් කිරීමට රජය විසින් කටයුතු කළයුතු වේ. සාධනීය

ක්‍රියාමාර්ග මත පදනම් වූ යම් ප්‍රතිකාර්මික ක්‍රමවේදයක් ඇසුරෙන් ඒ පාසල් හා සිසුසිසුවියන්ට සහය ලබාදිය යුතුය, උදා:

- o පාසල් වර්ෂයේ ඉතිරි කාලය තුළ ඔවුන්ට අදාළ වන පාසල් විෂයමාලාව වඩාත් සංක්ෂිප්ත කිරීම;
- o ජාතික මට්ටමේ විභාගවලදී ඔවුන්ට විශේෂ ඇගයුම් ලබාදීම;
- o ඔවුන්ගේ විභාග සහතික/ අස්වීමේ සහතික/ චරිත සහතික යනාදියෙහි ඔවුන් අන් සිසුසිසුවියන්ගෙන් වෙන්කර විශේෂයෙන් හඳුනාගත නොහැකි කිරීම
- o මානසික සෞඛ්‍ය සහ වෘත්තීය මාර්ගෝපදේශනය වැනි විශේෂ සේවා ලබාදීම; සහ
- o ද්විතියික අධ්‍යාපනයෙන් පසුව තෘතියික අධ්‍යාපනයට පිවිසීමේදී ඔවුන්ට තෘතියික හෝ තාක්ෂණික පුහුණු ආයතනවලට ඇතුළුවීමට කෝටා, සහන යනාදිය ලබාදීම

### *පාසල් ප්‍රතිව්‍යුහගත කිරීම*

- අධ්‍යාපනය සම්බන්ධයෙන් අදළ වන ජාතික ප්‍රතිපත්තිවලට අනුකූලව සියළුම පාසල් පළාත් මට්ටමින් පරිපාලනය කළහැකි වන සේ, ජාතික/පළාත් යනුවෙන් පාසල් වර්ගීකරණය අහෝසි කිරීම.

- මධ්‍යම රජයේ අධ්‍යාපන අමාත්‍යාංශය අධ්‍යාපනය පිළිබඳ ජාතික ප්‍රතිපත්ති සැකසීමට නායකත්වය දිය යුතු අතර පළාත් අධ්‍යාපන පරිපාලනය විසින් ඒවා ක්‍රියාත්මක කිරීම අධීක්ෂණය කළ යුතු අතර, පළාත් විසින් ජාතික අධ්‍යාපන ප්‍රතිපත්ති ක්‍රියාත්මක කිරීම සහ ජාතික මට්ටමේ දී අධ්‍යාපන ප්‍රතිපත්ති සම්පාදනය කිරීම අතර සුදුසු ප්‍රතිපෝෂණ වළළු ඇති කළ යුතුය. (උදාහරණයක් ලෙස, අධ්‍යාපන පද්ධතියේ සුදුසු සියලුම මට්ටම්වලට අදාළ අධීක්ෂණ සහ ඇගයීම් යාන්ත්‍රණ ගොඩනැගීම).

- මාර්ගගත අධ්‍යාපනයට මාරුවීම සාර්ථක වී ඇති පාසල්වල ගුරුවරුන් නිදහස් කිරීමේ හැකියාව ගවේෂණය කළ යුතු අතර එමගින් (අන්තර්වාර පියවරක් ලෙස) ඉහළ පළපුරුද්දක් සහිත ගුරුවරුන් වඩාත් අවශ්‍ය වන ස්ථානවල ඔවුන් නැවත ස්ථානගත කළ හැකිය.

- සියලුම පාසල් ප්‍රාථමික, පහළ ද්විතියික හෝ ඉහළ ද්විතීයික ලෙස ප්‍රතිව්‍යුහගත කර නැවත වර්ගීකරණය කළ යුතු අතර, ඒවාට ඇතුළත් වන්නේ පිළිවෙලින් 1-5, 6-9 සහ 10-13 ශ්‍රේණිවල පන්ති පමණි. මෙම වර්ගීකරණයට ඉඩ දෙන ප්‍රමාණයට වඩා වැඩි පන්ති සහිත පාසල් නව පාසල්වලට බෙදිය යුතු ය.

- ප්‍රාථමික පාසල් වයසේ සිටින සියලුම සිසුන්ට තම නිවසේ සිට කිලෝමීටර 4ක් ඇතුළත පාසලකට ඇතුළත්වීමට ප්‍රවේශය තිබිය යුතු ය. ප්‍රාථමික පාසල් 2 සිට 3 දක්වා සංඛ්‍යාවක සිසුන් අන්තර්ග්‍රහණය කර ගත හැකි පහළ ද්විතියික පාසල් සෑම ප්‍රදේශයකම ස්ථාපිත කළ යුතු ය. සිසුන්ට අධ්‍යයන, වෘත්තීය, තාක්ෂණික සහ නිර්මාණාත්මක ඉගෙනුම් ධාරා අතරින් සුදුස්සක් තෝරාගත හැකිවන පරිදි ද්විතීයික අධ්‍යාපනයට විවිධ විෂයය ධාරාවන් ඇතුළත් විය යුතු ය.

- එකම ඉහළ ද්විතීයික පාසලකින් සියලුම විෂය ධාරාවන් සැපයීමට අපේක්ෂා කිරීම වෙනුවට විශේෂිත විෂයය ධාරාවන් සඳහා ඉහළ ද්විතීයික පාසල් විශේෂීකරණය කිරීමෙන් සම්පත් කාර්යක්ෂමව බෙදා හැරීම සහතික කළ යුතු ය. කෙසේනමුත්, අදාළ වයසේ සිටින සියලුම සිසුන්ට තමන් කැමති ඕනෑම ඉහළ ද්විතියික විෂය ධාරාවක් සඳහා ප්‍රමාණවත් ප්‍රවේශයක් ඇති බව පළාත් අධ්‍යාපන පරිපාලනය සහතික කළ යුතු වේ.

- සියලුම සිසුන් තමන් තෝරාගත් විෂය ධාරාව සහිත ළඟම ඇති ද්විතීයික පාසලට ඇතුළත් විය යුතු යැයි නියම කිරීම මගින් "ජනප්‍රිය" පාසල්වලට ඇතුළත් වීමට සිසුන් අතර ඇති තරඟය තුරන් කළ යුතු වේ. ප්‍රාථමික මට්ටමින් මෙන්ම ද්විතියික මට්ටමේ එක් එක් විෂය ධාරා මට්ටමින් සියලුම පාසල්වලට අවශ්‍ය අවම භෞතික සම්පත් අධ්‍යාපන අමාත්‍යාංශය විසින් නිල වශයෙන් තීරණය කළ යුතුය. ඊට වැඩියෙන් සම්පත් ඇති පාසල්වලින් සම්පත් හිඟ පාසල්වලට ඒවා නැවත ලබාදීම ජාතික අධ්‍යාපන ප්‍රතිපත්තියේ පොදු අරමුණක් විය යුතුය. අවශ්‍ය සහ සුදුසු අවස්ථාවලදී, පාසල් කිහිපයක් හරහා සම්පත් බෙදාගැනීමේ යාන්ත්‍රණ පළාත් අධ්‍යාපන පරිපාලනය විසින් සකස් කළ යුතුය.

- පළාත් අධ්‍යාපන පරිපාලනය විසින් නිල වශයෙන් "උසස් පාසල්" නම් කළ යුතු අතර, අන්ත දුර්වල සමාජ ආර්ථික පසුබිමක සිටිමින් (උදා: ජාතික පාසල් ආහාර වැඩසටහනට ඇතුළත් පාසල්වල සිසුන්) දක්ෂතා සහ හැකියාවන් විදහා දක්වන සිසුන්ට පමණක් එම පාසල්වල ස්ථාන වෙන් වෙන් කර දිය යුතු ය. එවැනි උසස් පාසල්වලට ඇතුළත් වීමට අඩු ආදායම්ලාභී පසුබිම්වලින් සිසුන් තෝරා ගැනීමේදී චිත්තවේගීය බුද්ධිය, සාමාන්‍ය යෝග්‍යතා සහ අත්‍යවශ්‍ය ඉගෙනුම් කුසලතා පිළිබඳ අවධානය යොමු කරන පරීක්ෂණයක් භාවිතා කළ යුතු ය. අඩු ආදායම්ලාභී පවුල්වල සියලුම දරුවන්ට 1 ශ්‍රේණියේ සිට ම ඉගෙනුම් ආධාරක ප්‍රදානයක් ලබා දිය යුතු අතර, හැකිනම් පවුල පදනම් වූ සහනාධාර සහ ප්‍රදාන සමඟ එය ඒකාබද්ධ කළ යුතුය.

- ආර්ථික වශයෙන් අන්ත දුර්වල පසුබිමක සිටින සිසුන් අතරින් වැඩිම කුසලතා ඇති සිසුන් උසස් පාසල් වෙත යවන අතර ම, එවැනි ප්‍රජාවන්ට පවතින අනෙකුත් පාසල්වල ගුණාත්මකභාවය ද ජාතික අධ්‍යාපන ප්‍රතිපත්තියට අනුකූල මට්ටමක පවතින බව රජය සහතික කරගත යුතු ය. ප්‍රධාන වශයෙන් ම එවැනි ප්‍රජාවන්ට සේවය ලබාදෙන පාසල් නිශ්චිතව හඳුනාගත යුතු අතර, ඒවායේ සංවර්ධනය සඳහා කාල නියමයන් නියම කළ යුතුය.

### *ඉගෙනුම් අන්තර්ගතය සහ ඇගැයුම*

- ඉගෙනුම් අන්තර්ගතය, එනම් සාමාන්‍ය අධ්‍යාපනයේ සෑම මට්ටමකම විෂයය නිර්දේශ, දැනුමට අමතරව කුසලතා සහ ආකල්ප වර්ධනය ඇතුළු අධ්‍යාපනයේ සමකාලීන ඉලක්ක පිළිබිඹු වන පරිදි ප්‍රතිසංස්කරණය කළ යුතු ය. විවිධ යෝග්‍යතා මට්ටම් පෙන්වන සිසුන් හට ඔවුනට සුදුසු සහ ප්‍රයෝජනවත් ප්‍රමිතියක අධ්‍යාපනයක් කරා ප්‍රවේශය ලැබෙන පරිදි ද්විතීයික මට්ටමින් බහුවිධ අධ්‍යාපන ප්‍රවාහ ලබා දිය යුතුය - උදා, සිසුන්ට ගණිතය පිළිබඳ උසස්, න්‍යායාත්මක අධ්‍යාපනයක් හෝ වෘත්තීය මාර්ගයක් තෝරා ගැනීමට හැකි විය යුතුය. පවතින බහුවිධ අධ්‍යාපන ප්‍රවාහය ද්විතීයික පාසලෙන් සමත්වීමට මෙන්ම තෘතීයික අධ්‍යාපනයට හෝ වෘත්තීය/තාක්ෂණික පුහුණුවට ඇතුළු වීමට ඇති විවිධ මාර්ග සමඟ අනුරූප විය යුතුය.

- ප්‍රාථමික මට්ටමින් විභාග සම්පූර්ණයෙන්ම අහෝසි කළ යුතු වේ. සෑම මට්ටමකදී ම, සමාකලන (summative) ඇගයීම අත්හැර උද්භව (formative) ඇගයීමට යොමු විය යුතු අතර, වරින් වර පවත්වන ලිඛිත වාර පරීක්ෂණ මගින් නොව, අඛණ්ඩ පදනමක් මත ශිෂ්‍ය ඉගෙනීම තක්සේරු කළ යුතු ය. තොරතුරු උකහාගෙන ලිඛිත විභාගවලදී එය පුනරුච්චාරණය කිරීමට වඩා, උගත් දැනුම යෙදවීමට සිසුසිසුවියන්ට ඇති හැකියාව පිළිබඳව ඇගයීම කෙරෙහි අවධානය යොමු කළ යුතුය. ලිවීමේ කුසලතා පමණක් නොව කතා කිරීම, ඉදිරිපත් කිරීම සහ වෙනත් නිර්මාණාත්මක ප්‍රකාශන සම්බන්ධයෙන් සිසුසිසුවියන් ඇගයීම කෙරෙහි අවධානය යොමු කළ යුතුය. සිසුසිසුවියන් ඇගයීම හැකිතාක් දුරකට මණ්ඩල හරහා සිදුකළ යුතු වේ.

- 5 ශ්‍රේණිය ශිෂ්‍යත්වය අහෝසි කළ යුතු ය. ඔවුන්ගේ ප්‍රාථමික අධ්‍යාපනය අවසන් වීමට ආසන්න වන විට සිසුසිසුවියන්ට එක් එක් ශිෂ්‍යයාගේ ශක්තීන්, දුර්වලතා සහ සාමාන්‍ය නිපුණතා හඳුනාගැනීම කෙරෙහි අවධානය යොමු කරන තරගකාරී නොවන විශේෂ ඇගයීමකට මුහුණ දීමට සිදු විය හැක. අතිශය දුගී පසුබිමක සිසුන්ට ඔවුන් සඳහා වෙන් කර ඇති "උසස් පාසල්" වලට ඇතුළත් වීමට සුදුසුකම් ලැබීමට විශේෂ පරීක්ෂණයකට මුහුණ දිය හැකිය. කෙසේ වෙතත්, එවැනි පරීක්ෂණයක් ද, විවිධ හැකියාවන් ඇති සිසුන්ට ඔවුන්ගේ කුසලතා ප්‍රදර්ශනය කිරීමට ඉඩ සලසන පරිදි පුළුල් පදනමක් සහ බහු- අංග සහිත පරීක්ෂණයක් විය යුතුය.

- විශේෂයෙන්ම ඒවා රජයේ විශ්වවිද්‍යාලවලට ඇතුළත්වීමේ පදනම වන විට, සාමාන්‍ය පෙළ සහ උසස් පෙළ විභාග තුළ සිසුසිසුවියන්ගේ විෂය බාහිර ක්‍රියාකාරකම්, ප්‍රජා වැඩ සහ ක්‍රීඩා වැනි අනධ්‍යයන කුසලතා සඳහා ප්‍රමාණවත් බරක් ලබා දිය යුතු ය. යමක් සඳහා සුදුසුකම් ලැබීමේ විභාගවලදී සිසුසිසුවියන්ට තම කුසලතා සහ තෝරාගත් විෂය ධාරාවට ගැලපෙන ඇගයීම් ක්‍රමයක් තෝරා ගැනීමට ඉඩ සැලසිය යුතු ය. කෙසේනමුත් සාමාන්‍යයෙන් අධ්‍යාපන ප්‍රතිපත්තිය සාමාන්‍ය පෙළ හා උසස් පෙළ විභාගවලින් බැහැර වී උද්භව (formative) ක්‍රමවේදයක් කරා යොමුවීම ප්‍රවර්ධනය කරන ප්‍රවේශයක් කරා යොමු විය යුතුය.

### *ගුරුවරුන් සහ විදුහල්පතිවරුන්*

- ගුරු වෘත්තිය රටේ ඉහළම වැටුප් ලබන වෘත්තියක් බවට පත් කිරීම ඇතුළුව සියලුම ගුරුවරුන්ට ආකර්ෂණීය ප්‍රතිලාභ පැකේජයක් පිරිනැමිය යුතු ය.

- අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ සාමාජිකයන්ගේ සියලුම පත්වීම්, ස්ථාන මාරුවීම් සහ විනය පාලනය සම්බන්ධයෙන් සාධාරණව හා විනිවිදභාවයෙන් යුතුව සලකා බලන බව සහතික කිරීම සඳහා ස්වාධීන අධ්‍යාපන පරිපාලන සේවා කොමිෂන් සභාවක් ස්ථාපිත කළ යුතු ය.

- සියලුම අධ්‍යාපන සේවා අතර ප්‍රමුඛතම සේවාව ලෙස ගුරු සේවය පිළිගත යුතු අතර ශ්‍රී ලංකා අධ්‍යාපන පරිපාලන සේවය (SLEAS), විදුහල්පති සේවය, වැනි අනෙකුත් අධ්‍යාපන සේවාවන්ට ඇතුළත් වීමට පන්තිකාමරවල ඉගැන්වීමේ අවම පළපුරුද්දක් තිබීම සුදුසුකම් නිර්ණායකයක් විය යුතු ය. අවශ්‍ය පළපුරුද්ද සහ නිරාවරණය ඇති ගුරු සේවයේ සාමාජිකයන් බඳවා ගැනීමෙන් එවැනි සේවාවල පුරප්පාඩු සපුරාලිය යුතු ය.

- පාසල්වල අධ්‍යයන කාර්ය මණ්ඩලය පත් කළ යුත්තේ අවශ්‍යතාවය මත පමණි. ප්‍රාථමික, ග්‍රාමීය හෝ අඩු සම්පත් සහිත පාසල්වල විදුහල්පතිවරුන්ට සහ ගුරුවරුන්ට පිළිගැනීම අතින් අනෙකුත් විදුහල්පතිවරුන් සහ ගුරුවරුන් සමඟ සමාන (හෝ ඊට වැඩි මට්ටමක්) ලබා දීම සඳහා, දැනට පවතින විදුහල්පති සහ ගුරු ශ්‍රේණිගත කිරීමේ ක්‍රමය ප්‍රතිසංස්කරණය කළ යුතු ය. ප්‍රාථමික, ග්‍රාමීය හෝ අඩු සම්පත් සහිත පාසල්වල සේවය කරන කාර්ය මණ්ඩලයට ඔවුන්ගේ සේවය සඳහා විශේෂ සහයෝගයක් සහ දිරිගැන්වීම් ලැබිය යුතු අතර, ජ්‍යෙෂ්ඨත්වයෙන් වැඩි සේවා ශ්‍රේණිවල විදුහල්පතිවරුන් සහ ගුරුවරුන් එවැනි පාසල් වෙත ඇදී යා යුතුය. විශේෂයෙන්ම ස්ථාන මාරුවීම් සහ උසස්වීම්වලට අදාළ ඔවුන්ගේ කාර්ය සාධන ඇගයීම්වලදී ඔවුන්ට විශේෂ පිළිගැනීමක් ලබාදිය යුතු වේ.

- ඉගැන්වීමේ ක්‍රමවල සමකාලීන දියුණුවීම් සම්බන්ධයෙන් ගුරුවරුන් සහ විදුහල්පතිවරුන් වෙත කාලානුරූපව පුහුණු ලබාදිය යුතු ය. ඉගැන්වීම් ක්‍රමවලට අදාළ සියලුම ප්‍රතිසංස්කරණවලදී ඔවුන්ගේ අදහස් විමසීම සහ ඔවුන් සම්බන්ධ කරගැනීම කළ යුතුය. සියලුම පාසල්වලට මිල අධික තාක්ෂණය ඇතුළත් නව ඉගැන්වීම් ක්‍රම යොදගැනීම සඳහා අවශ්‍ය සම්පත් සඳහා ප්‍රවේශය

නොමැති නම් එවැනි ක්‍රම ක්‍රියාත්මක නොකළ යුතු ය. කෙසේ වෙතත්, ආබාධිත ළමුන් සඳහා වන පාසල් සහ සිසුන්ට උගන්වන පාසල් වැනි විශේෂ පාසල් කාණ්ඩවලට විශේෂ තාක්ෂණයන් වෙත යොමු විය හැක්කේ එවැනි කාණ්ඩ තුළ ඇති සියලුම පාසල් එවැනි තාක්ෂණයන් සඳහා සමාන මට්ටමේ ප්‍රවේශයක් භුක්ති විඳිය හැකි නම් පමණි.

- සෑම පාසලකටම මාර්ගෝපදේශක උපදේශකවරුන් (Guidance counsellors) සහ මානසික සෞඛ්‍ය උපදේශකවරුන් පත්කළ යුතු ය. මාර්ගෝපදේශ උපදේශකවරුන් සිසුසිසුවියන් සමඟ තනි පුද්ගල සබඳතා පවත්වා ගනිමින් පාසල හරහා ඔවුන්ගේ ප්‍රගතිය නිරීක්ෂණය කිරීමටත්, නව අධ්‍යාපන සුසමාදර්ශය තුළ ඉගෙනුම ලබන සිසුසිසුවියන් ලෙස ඔවුන්ට ඇති බහුවිධ ඉගෙනුම් මාර්ගවල කවරේදැයි අවබෝධ කරගැනීමට ඔවුන්ට සහාය දීමටත් කටයුතු කළයුතු ය.

ශ්‍රී ලාංකීය දූදරුවන් අනාගතයේ අභියෝගවලට සහ වෘද්ධිය සඳහා මග පාදදෙන සාධකවලට සූදානම් කරවීමට නම්, අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ අත්‍යාවශ්‍ය ය. වසංගතය මගින් අධ්‍යාපන පද්ධතිය පීඩාවට පත් කර ඇති අතර, මූල්‍ය අර්බුදය හරහා මීට අමතර අභියෝග නිර්මාණය කර දී ඇත. ඉදිරියේදී මුහුණ දෙන්නට සිදුවන බවක් පෙනෙන්නට ඇති නොවැළැක්විය හැකි වියදම් කැපීම්, කප්පාදු පියවරයන්ට යටත් නොකර අධ්‍යාපනයට ප්‍රමුඛත්වය දීම අත්‍යාවශ්‍ය වේ.

# கொவிட் தொற்றுநிலைக்குப் பின்னரான இலங்கையில் கல்வியினை மறுசீரமைத்தல்

கொள்கைச் சுருக்கம்

கல்வியின் மீதான கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கத்தினையும் அது எவ்வாறு இத்துறையில் முன்பு நிலவிவந்த ஒப்புரவின்மைகளை மோசமாக்கியுள்ளது என்பதையும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (The Law & Society Trust) ஆவணப்படுத்தியுள்ளது. பெருந்தொற்றுக்குப் பின்னரான உலகினுள் நுழைவதற்கு முக்கியமானதென நாம் நினைக்கும் சில கல்வி மறுசீரமைப்புக்களை இக்கொள்கைச் சுருக்கத்தில் நாம் பரிந்துரைக்கின்றோம். கல்வியினைப் பொறுத்த அளவில், எமது கரிசனை அதன் ஒப்புரவாகும். முழுமுடக்கங்கள் அமுல்படுத்தப்பட்டு “இணையவழிக் கல்விக்கான” நகர்வு பிரகடனப்படுத்தப்பட்டதும், அனைத்து மாணவர்களும் ஒரே விதமான பாதிப்புக்கு உள்ளாகவில்லை. கல்வி முறைமை மீது பெருந்தொற்று மிகப் பாரிய அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது, ஆனால் கல்வி முறைமையில் ஏற்கனவே நிலவிவரும் ஒப்புரவின்மைகளால் ஏற்கனவே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களே இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளை வகைப்படுத்துவதற்குப் பல்வேறு அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இந்த அணுகுமுறைகள் அனைத்துமே, பாடசாலைகள் சமமற்ற முறையில் வளங்களைப் பெறுகின்றன என்பதையும் வளக் குறைபாடுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே பெருந்தொற்றின் தாக்கத்திற்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதையும் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றன. கல்வி மீதான எவ்விதமான மறுசீரமைப்புகளும் பரந்த ஒழுங்குமுறை சார்ந்த மாற்றங்களை ஆலோசனையாக முன்வைப்பதற்கு மேலதிகமாகப் பெருந்தொற்றினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஏற்பாடுகளையும் வழங்கவேண்டும். இவ்வாறான ஒழுங்குமுறை சார்ந்த மாற்றங்கள் எதிர்காலத்தினை மட்டும் நோக்காது கடந்த கால அநீதிகளையும் நோக்கவேண்டும்.

இலங்கைக் கல்வி மன்றின் பணியினையும் கல்வி மறுசீரமைப்புக்களுக்கான ஜனாதிபதி செயலணியின் அறிக்கையினையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இவற்றிலிருந்து நாம் அகத்தூண்டுதல் பெற்றுள்ளோம். அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக சமர்ப்பிக்கப்பட்ட தேசிய வரவுசெலவுத் திட்டங்களில் அதன் பரிந்துரைகள் போதிய அளவு கருத்திற்கொள்ளப்படவில்லை என்பதையிட்டு நாம் மனம் வருந்துகின்றோம். இன்று பாராளுமன்றத்திலுள்ள சகல பிரதான அரசியல் கட்சிகளிலும், தேசிய மக்கள் சக்தி மட்டுமே அதன் இணையத்தளத்தில் கல்விக் கொள்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது - அந்த முன்மொழிவுகளில் இருந்தும் நாம் கருத்துக்களைப் பெற்றுள்ளோம். வறுமையினால் கல்வியின் மீது ஏற்படுத்தப்படும் தலைமுறைரீதியானதும் மீள்சுற்றாக ஏற்படுவதுமான தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு, இம்முன்மொழிவுகளுக்குச் சமூகபொருளாதார நீதிப் பரிமாணத்தினைச் சேர்த்தமையே முன்மொழிவுகளுக்கான எமது தனித்துவமான பங்களிப்பாகும்.

## கொவிட்-19 தலைமுறை

- பெருந்தொற்று ஆரம்பித்ததில் இருந்து பாடசாலைக்கு வருகை தராத மாணவர்களை அரசாங்கம் முனைப்பாகத் தேடியடைந்து அவர்கள் கல்விக்குத் திரும்பி வருவதை

உறுதிப்படுத்தவும் கண்காணிக்கவும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தவேண்டும். பெருந்தொற்று ஏற்பட்டதில் இருந்து பாடசாலை செல்லும் வயதுடைய மாணவர்கள் தொழில்களுக்குள் நுழைந்திருந்தால் அல்லது திருமணம் முடித்திருந்தால், பிள்ளையின் மிகச் சிறந்த நலனே பாதுகாக்கப்படுகின்றது என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். கொவிட் தொற்றுநிலைக்குப் பின்னர் கல்விக்குத் திரும்பிய மாணவர்கள், விசேடமாகக் கண்காணிக்கப்படுவதுடன் அந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு உதவவும் வேண்டும்.

- பெருந்தொற்றினால் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளையும் மாணவர்களையும் அவ்வாறு பாதிக்கப்படாதவற்றில் இருந்து வித்தியாசப்படுத்துவதற்கு, ஓர் அவசரமான விடயமாக, ஒரு முறைமையினையும் பொறிமுறையினையும் அரசாங்கம் உருவாக்கவேண்டும். உறுதிப்படுத்தும் நடவடிக்கையின் அடிப்படையிலான பரிகாரத் திட்டம் ஒன்று முன்னைய வகைக்குக் கிடைக்கச் செய்யப்படவேண்டும். அது பின்வருவனவற்றை மேற்கொள்ளும்,
    - அவர்களுக்குப் பிரயோகிக்கத்தக்க பாடத்திட்டத்தினை எஞ்சிய பாடசாலை வருடங்களில் சுருக்குதல்;
    - தேசிய பரீட்சைகளில் விசேட கணிப்பீடுகளை வழங்கல்;
    - அவர்களின் பரீட்சையில்/விட்டுச்செல்கையில்/நற்சான்றுப் பத்திரத்தில் அவர்களை ஏனைய மாணவர்களிடம் இருந்து வேறுபிரிக்க முடியாததாக ஆக்குதல்;
    - மனநல சுகாதாரம் மற்றும் தொழில் வழிகாட்டல் போன்ற விசேட சேவைகளை வழங்கல்; மற்றும்
    - இரண்டாம் நிலைக் கல்வியின் பின்னர் நுழையும் மூன்றாம் நிலைக் கல்வியில் அல்லது தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்களில் கோட்டாக்கள், மானியங்கள், இன்னும் பிற.

## *பாடசாலைகளை மீள்கட்டமைத்தல்*

- பாடசாலைகளின் தேசிய/மாகாண வகைப்படுத்தலை இல்லாமலாக்கல். இதனால் சகல பாடசாலைகளையும் மாகாண மட்டத்தில் கல்வி மீதான உரிய தேசியக் கொள்கைகளுக்கு அமைவாக நிர்வகிக்க முடியும்.

- கல்வி பற்றிய தேசியக் கொள்கைகளின் உருவாக்கத்திற்கு மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சுத் தலைமைதாங்கி, மாகாணக் கல்வி நிர்வாகங்களால் அவை அமுல்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்யவேண்டும். அதேவேளை, சகல தேசிய மட்டக் கல்விக் கொள்கைகளின் (கல்வி முறைமையின் சகல பொருத்தமான மட்டங்களினுள்ளும் பொருத்தமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறைகளை உருவாக்குதல் போன்றவை) தேசிய உருவாக்கத்திற்கும் மாகாண மட்ட அமுல்படுத்தலுக்கும் இடையில் பொருத்தமான பின்னூட்டல் வளையங்களை நிறுவனமயமாக்குதல்.

- இணையவழிக் கல்விக்கான இடைமாற்றத்தினை வெற்றிகரமாக நிகழ்த்திய பாடசாலைகள் ஆசிரியர்களை விடுவிக்கும் சாத்தியங்களை ஆராயவேண்டும். இதனால் மிகுந்த அனுபவமுடைய ஆசிரியர்கள் மிகவும் தேவைப்படும் வேறு இடங்களில் நியமிக்கப்பட முடியும் (ஓர் இடைக்கால நடவடிக்கையாக).

- சகல பாடசாலைகளும் ஆரம்ப நிலைப் பாடசாலைகள், கீழ் இரண்டாம் நிலை அல்லது மேல் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் என மீள்கட்டமைக்கப்பட்டு மீள்வகைப்படுத்தப்படவேண்டும். இதனால் அவை முறையே 1-5, 6-9 மற்றும் 10-13 ஆம் தரங்களில் இருந்து மாத்திரம் வகுப்புக்களை கொண்டிருக்க முடியும். தற்போது இந்த

வகைப்படுத்தல் அனுமதிப்பதை விட அதிகமான வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகள் புதிய பாடசாலைகளாகப் பிரிக்கப்படவேண்டும்.

- ஆரம்ப நிலைப் பாடசாலை வயதினைக் கொண்ட சகல மாணவர்களும் அவர்களின் வீட்டில் இருந்து 4 கிலோ மீற்றர் தூரத்தினுள் உள்ள ஒரு பாடசாலைக்கான அணுகலைக் கொண்டிருக்க வேண்டும். ஒரே நேரத்தில் 2 முதல் 3 ஆரம்பப் பாடசாலைகளில் இருந்து மாணவர்களை உள்ளீர்ப்பதற்காக கீழ் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் நிறுவப்படவேண்டும். இரண்டாம் நிலைக் கல்வி பல்வேறு துறைகளைக் கொண்டிருக்கவேண்டும். இதனால் மாணவர்கள் கல்வி, தொழிற்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் ஆக்கத்திறன்மிக்க கற்றல் ஆகியவற்றின் மத்தியில் இருந்து தெரிவினை மேற்கொள்ள முடியும்.

- ஒரே பாடசாலையிலேயே சகல பிரிவுகளுக்குமான கல்வியினை வழங்கும் அபிலாஷைக்கு பதிலாக குறிப்பிட்ட பிரிவுகளில் நிபுணத்துவம் அடைவதன் மூலம் வளங்களின் வினைத்திறன்மிக்க விநியோகத்தினை மேல் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் உறுதிப்படுத்தவேண்டும். ஆயினும், சம்பந்தப்பட்ட வயதினையுடைய சகல மாணவர்களும் அவர்களின் தெரிவுக்குரிய எந்த ஒரு மேல் இரண்டாம் நிலைப் பிரிவுக்குமான போதிய அணுகலைக் கொண்டுள்ளனர் என்பதை மாகாணக் கல்வி நிர்வாகம் உறுதிப்படுத்தவேண்டும்.

- மாணவர்களின் தெரிவுக்குரிய பிரிவில் கல்வியினை வழங்கும் அண்மையிலுள்ள இரண்டாம் நிலைப் பாடசாலைக்குச் செல்லுமாறு சகல மாணவர்களையும் தேவைப்படுத்துவதன் மூலம், மாணவர்களின் மத்தியிலான 'பிரபலமான' பாடசாலைகளுக்குச் செல்வதற்கான போட்டி அகற்றப்படவேண்டும். ஆரம்ப மட்டத்திலும் அதேபோன்று இரண்டாம் நிலை மட்டத்தில் ஒவ்வொரு பிரிவினதும் மட்டத்திலும் சகல பாடசாலைகளாலும் தேவைப்படுத்தப்படும் ஆகக்குறைந்த பௌதிக வளங்கள் உத்தியோகபூர்வமாகக் கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படவேண்டும். மிகை வளங்களைக் கொண்டுள்ள பாடசாலைகளில் இருந்து குறைந்த வளங்களைக் கொண்டுள்ள பாடசாலைகளுக்கு வளங்களை மீள ஒதுக்குவது தேசிய கல்விக் கொள்கையின் பொதுவான குறிக்கோளாக இருத்தல் வேண்டும். தேவையானவிடத்து மற்றும் பொருத்தமானவிடத்து, மாகாணக் கல்வி நிர்வாகங்கள் பல பாடசாலைகளின் மத்தியில் வளப் பகிர்வுப் பொறிமுறைகளை உருவாக்கவேண்டும்.

- மாகாணக் கல்வி நிர்வாகங்கள் "சிறந்த பாடசாலைகள்" எனப் பாடசாலைகளை உத்தியோகபூர்வமாக நியமித்து, மிக மோசமாகப் பின்தங்கிய சமூகப்பொருளாதாரப் பின்புலங்களைச் சேர்ந்தவர்களாக உள்ள அதேவேளை சிறப்புத் தேர்ச்சியினையும் ஆற்றலையும் எடுத்துவிளக்குகின்ற மாணவர்களுக்கென (உதாரணமாக, தேசிய பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள்) அவ்வாறான பாடசாலைகளில் பிரத்தியேகமாக இடங்களை ஒதுக்கவேண்டும். இவ்வாறான சிறந்த பாடசாலைகளில் சேர்வதற்குக் குறைவான வருமானமுடைய பின்புலங்களைச் சேர்ந்த மாணவர்களைத் தெரிவுசெய்கையில் உணர்வுரீதியான புலமை, பொது உளச்சார்பு, மற்றும் அவசியமான கற்றல் தகைமைகள் ஆகியவற்றில் கவனம் குவிக்கும் ஒரு பரீட்சை பயன்படுத்தப்படவேண்டும். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சகல பிள்ளைகளுக்கும் கற்றல் உதவி மானியம் 1 ஆம் தரத்தில் இருந்து வழங்கப்படவேண்டும். சாத்தியமெனின் இது குடும்ப அடிப்படையிலான மானியங்கள் மற்றும் கொடைகளுடன் சேர்க்கப்படவேண்டும்.

- பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள பின்புலத்தின் மத்தியில் இருந்து அதீத சிறப்புத் தேர்ச்சியுடைய மாணவர்கள் சிறந்த பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகையில், அவ்வாறான சமுதாயத்தில் காணப்படும் கிரமமான பாடசாலைகள் சேவைத் தரத்தின் அடிப்படையில் தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாகக் கொண்டுவரப்படுகின்றன என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும். இவ்வாறான சமுதாயங்களுக்குப் மிகப்பெரும்பான்மையாகச் சேவையாற்றும் பாடசாலைகள் தனித்துவமான முறையில் அடையாளம் காணப்பட்டு அவற்றின் அபிவிருத்திக்கான காலச் சட்டகம் குறித்துரைக்கப்படவேண்டும்.

## *கற்றல் உள்ளடக்கம் மற்றும் மதிப்பீடு*

- கற்றல் உள்ளடக்கம், அதாவது பொதுக்கல்வியின் அனைத்து மட்டங்களிலுமான பாடத்திட்டங்கள், அறிவுக்கு மேலதிகமாக, திறன்களினதும் மனப்பாங்குகளினதும் விருத்தி உள்ளடங்கலாகக் கல்வியின் தற்கால இலக்குகளைப் பிரதிபலிப்பதற்கு மறுசீரமைக்கப்படல் வேண்டும். இரண்டாம் நிலை மட்டத்தில் பல பிரிவுகளில் கல்வி வழங்கப்படவேண்டும். இதனால் வெவ்வேறு மட்டங்களிலான உளச்சார்புகளைக் காட்டும் மாணவர்கள் அவர்களுக்குப் பொருத்தமானதும் பயன்மிக்கதுமான கல்வித் தராதரத்திற்கு அணுகலைக் கொண்டிருப்பர். உதாரணமாக, கணிதம், தொழிற்கல்வி போன்றவற்றில் மேம்பட்ட கல்விக்கும் கோட்பாட்டு ரீதியான கல்விக்கும் இடையில் மாணவர்களினால் தெரிவினை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். கிடைக்கக்கூடியதாக இருக்கும் கல்வியின் பல பிரிவுகள் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் இருந்து பட்டம் பெறுவதற்கான பல்வேறு வழிகளுடன் இயைபுறவேண்டும். அதேபோன்று மூன்றாம் நிலைக் கல்வி அல்லது தொழிற்கல்வி/தொழில்நுட்பப் பயிற்சியுடன் இயைபுறவேண்டும்.

- பரீட்சைகள் ஆரம்ப மட்டத்தில் முற்றுமுழுவதும் அகற்றப்படவேண்டும். ஒவ்வொரு மட்டத்திலும் கட்டுருவாக்கக் கணிப்பீட்டுக்காக (Formative Assessment) இறுதிக் கணிப்பீடுகள் (summative Assessment) கைவிடப்படவேண்டும். மேலும் மாணவர் கற்றல் ஒன்றுசேர்க்கப்பட்ட, எழுத்துத் தவணைப் பரீட்சைகளின் மூலம் கணிப்பிடப்படுவதை விடத் தொடர் கணிப்பீட்டு அடிப்படையில் கணிப்பிடப்பட வேண்டும். தகவல்களைத் திணித்து அதனை எழுத்துப் பரீட்சைகளில் மீண்டும் ஒப்புவிப்பதற்குப் பதிலாகக் கற்றுக்கொண்ட அறிவினைப் பிரயோகிக்கும் மாணவர்களின் ஆற்றலில் கணிப்பீடுகள் கவனம் குவிக்கவேண்டும். மாணவர் மதிப்பீடுகள் வெறுமனே மாணவர்களின் எழுத்துத் திறன்களில் மாத்திரம் கவனம் குவிக்காது அவர்களின் பேச்சு, சமர்ப்பிப்பு மற்றும் வெளிப்பாட்டின் ஏனைய ஆக்கத்திறன்மிக்க வடிவங்களிலும் கவனம் குவிக்கவேண்டும். இயலுமான அளவு, மாணவர்கள் குழாம்களினால் மதிப்பிடப்படவேண்டும்.

- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை இல்லாமலாக்கப்படவேண்டும். மாணவர்கள் அவர்களின் ஆரம்பக் கல்வியினைப் பூர்த்திசெய்யும் தறுவாயில் ஒரு விசேட மதிப்பீட்டுக்கு முகங்கொடுப்பதற்குத் தேவைப்படுத்தப்படலாம். இது போட்டிமிக்கதாக இல்லாமல் ஒவ்வொரு மாணவரினதும் பலங்கள், பலவீனங்கள் மற்றும் பொதுவான தகைமைகள் ஆகியவற்றில் கவனம் குவிக்கவேண்டும். அதீத வறுமைப் பின்புலங்களைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட ‘சிறந்த பாடசாலைகளில்’ அனுமதிக்கப்படுவதற்குத் தகைமை பெறுவதற்காக ஒரு விசேட பரீட்சைக்கு முகங்கொடுக்கலாம். ஆயினும், அவ்வாறான பரீட்சையும் பரந்த அடிப்படையிலானதாக இருக்கவேண்டும் என்பதுடன் பல்வேறு ஆற்றல்களைக் கொண்டுள்ள மாணவர்கள் அவர்களுக்கேயுரிய விதத்தில் அவர்களின் திறமைகளை வெளிக்காட்ட அனுமதிப்பதற்கு அது பல் பிரிவுகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

- சாதாரண தரப் பரீட்சையும் அரச பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதற்கான அடிப்படையான உயர் தரப் பரீட்சையும் மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், சமுதாயப் பணிகள், மற்றும் விளையாட்டு போன்ற மாணவர்களின் கல்வி சாராத் திறன்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். தகைமை பெறுவதற்காக நடத்தப்படும் பரீட்சைகள், மாணவர்களின் திறன்களுக்கும் அவர்களின் தெரிவுக்குரிய பிரிவுக்கும் பொருத்தமான மதிப்பீட்டு முறைமையினைத் தெரிவுசெய்வதற்கு அவர்களை அனுமதிக்கவேண்டும். ஆயினும், பொதுவாக, கல்விக் கொள்கையானது சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைகளில் இருந்து விலகி கட்டுருவாக்க அணுகுமுறையினை நோக்கி நகர்வதை ஊக்குவிக்கவேண்டும்.

## *ஆசிரியர்களும் அதிபர்களும்*

- சகல ஆசிரியர்களுக்கும் கவர்ச்சிகரமான நலன்களைக் கொண்ட பொதி வழங்கப்படவேண்டும். இதனை நாட்டில் அதிகூடிய கொடுப்பனவு செலுத்தப்படும் தொழில்களில் ஒன்றாக ஆக்குவதும் இதில் உள்ளடங்குகின்றது.

- சகல நியமனங்களும் இடமாற்றங்களும் கல்வித் துறை உறுப்பினர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் நியாயமாகவும் வெளிப்படைத்தன்மை மிக்க முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு சுயாதீனமான கல்வி நிர்வாக சேவை ஆணைக்குழு நிறுவப்படவேண்டும்.

- சகல கல்விச் சேவைகளின் மத்தியிலும் முதன்மைச் சிறப்புமிக்க சேவையாக ஆசிரியர் சேவை அங்கீகரிக்கப்படவேண்டும். மேலும் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS), அதிபர்கள் சேவை போன்ற ஏனைய கல்விச் சேவைகளுக்குள் நுழைவதற்கு வகுப்பறையில் கற்பித்த குறைந்த மட்ட அனுபவம் தகைமைத் தெரிவடிப்படையாக ஆக்கப்படவேண்டும். இவ்வாறான சேவைகளில் உள்ள வெற்றிடங்கள் தேவைப்படும் அனுவபத்தினையும் ஆற்றலையும் கொண்ட ஆசிரியர் சேவை உறுப்பினர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் நிரப்பப்படவேண்டும்.

- பாடசாலைகளின் கல்விசார் பணியாளர்கள் அனைவரும் தேவை அடிப்படையில் மாத்திரமே நியமிக்கப்படவேண்டும். ஆரம்ப நிலைப் பாடசாலைகளின், கிராமியப் பாடசாலைகளின் அல்லது வளம் குறைவான பாடசாலைகளின் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏனைய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குச் சமமான முறையில் (அல்லது உயர்வாக) அங்கீகாரச் சமத்துவத்தினை வழங்கும் வகையில் தற்போது அமுலில் இருக்கும் அதிபர் மற்றும் ஆசிரியர் தரமிடல் முறைமை மறுசீரமைக்கப்படவேண்டும். ஆரம்ப நிலைப் பாடசாலைகள், கிராமியப் பாடசாலைகள் அல்லது வளம் குறைவான பாடசாலைகளில் கடமையாற்றுவோர், அவர்கள் வழங்கும் சேவைகளுக்காக விசேட உதவியினையும் ஊக்குவிப்பினையும் பெறவேண்டும். மிகவும் சிரேஷ்ட சேவைத் தரங்களைக் கொண்ட அதிபர்களும் ஆசிரியர்களும் அவ்வாறான பாடசாலைகளுக்குப் பெறப்படவேண்டும். அவர்கள் அவர்களின் செயலாற்றுகை மதிப்பீடுகளில், குறிப்பாக இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகள் என வருகையில் விசேடமாக அங்கீகரிக்கப்படவேண்டும்.

- ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் கற்பித்தல் முறைகளின் தற்கால மேம்பாடுகளில் கிரமமான அடிப்படையில் பயிற்சி வழங்கப்படவேண்டும். கற்பித்தல் முறைகள் தொடர்பான சகல மறுசீரமைப்புக்களிலும் அவர்கள் கலந்தாலோசிக்கப்பட்டுச் சம்பந்தப்படுத்தப்படவேண்டும். செலவு கூடிய தொழில்நுட்பங்களைச் சம்பந்தப்படுத்தும் புதிய

கற்பித்தல் முறைகள், அவசியமான வளங்களைச் சகல பாடசாலைகளும் கொண்டிராவிட்டால் அமுல்படுத்தப்படலாகாது. எவ்வாறாயினும், அங்கவீனமான பிள்ளைகளுக்கான பாடசாலைகள் மற்றும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் பாடசாலைகள் போன்ற விசேட வகைப் பாடசாலைகளுக்கான வகைகளினுள் வரும் சகல பாடசாலைகளும் விசேட தொழில்நுட்பங்களுக்கான சமமான மட்டத்திலான அணுகலைக் கொண்டிருக்கையில் அவ்வாறான விசேட தொழில்நுட்பத்தினை அவை பயன்படுத்த நாடலாம்.

- வழிகாட்டல் ஆற்றுப்படுத்துனர்கள் மற்றும் மனநல ஆற்றுப்படுத்துனர்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் நியமனம் பெற்றிருக்கவேண்டும். வழிகாட்டல் ஆற்றுப்படுத்துனர்கள் மாணவர்களுடன் தனிமுறையாக்கப்பட்ட உறவினைக் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் அவர்களின் முன்னேற்றத்தினைப் பாடசாலை மூலம் கண்காணிக்கவும் வேண்டும். மேலும் புதிய கல்வி நெறியுதாரண மாற்றத்தில் மாணவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பல வழிகளில் அவர்கள் பயணிப்பதற்கு அவர்களுக்கு உதவவேண்டும்.

இலங்கைச் சிறுவர்கள் எதிர்காலத்தின் சவால்களுக்குத் தயார்படுத்தப்பட்டு வளர்ச்சிக்கான உந்து சக்தியாக ஆக்கப்படவேண்டுமாயின், கல்வி மறுசீரமைப்புக்கள் அவசியமானவையாகும். கல்வி முறைமையினைப் பெருந்தொற்றுப் பாதித்துள்ள அதேவேளை நிதி நெருக்கடி மேலதிக சவால்களை உருவாக்கியுள்ளது. கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படுவதும் நிகழும் வாய்ப்புள்ள தவிர்க்க முடியாத செலவுக் குறைப்புகள், சிக்கன நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு கல்வி உட்படாதிருப்பதும் அவசியமானதாகும்.

# *Reforming Education in post-Covid Sri Lanka*

Policy Brief

The Law & Society Trust has documented the impact of the Covid-19 pandemic on education, and how it essentially exacerbated pre-existing inequities in the sector. In this Policy Brief, we recommend some education reforms which we think are important in moving to a post-pandemic world. On education, our core concern is its equity. When lockdowns were imposed, and the shift to "online education" was declared, not all students were impacted the same way. The pandemic dealt a monumental shock to the education system, but the worst affected were those who were already suffering the most from the existing inequities of the education system. Various approaches are used to classify schools, but all of them directly or indirectly recognise that schools are resourced unequally, and students of under-resourced schools in all probability bore the brunt of the pandemic. Any reforms on education should provide for those directly affected by the pandemic, in addition to suggesting broader systemic changes. Such systemic changes should not only look to the future, but also at past injustices.

We acknowledge the work of the Education Forum of Sri Lanka, as well as the report of the Report of the Presidential Taskforce on Education Reforms, from which we drew inspiration. We regret that the report's recommendations have not been adequately considered in successive national budgets since its publication. Of all the major political parties in Parliament today, only the National People's Power had published an education policy in their website—we have drawn from those proposals as well. Our specific contribution to these proposals is the addition of a dimension of socioeconomic justice to them, in recognition of the generational and cyclical impact on education exerted by poverty.

## *The Covid-19 Generation*

- The government should actively seek out the students who have fallen into absenteeism since the pandemic began and implement programmes to ensure and monitor their return to education. Where students of schooling age have entered into employment or marriage since the pandemic, the government should ensure that the best interests of the child are protected. Students returned to

education post-Covid should be especially monitored and supported by persons designated with that task.

- The government must, as a matter of urgency, develop a method and mechanism to differentiate schools and students significantly impacted by the pandemic from those who were not. A remedial scheme on the basis of affirmative action should be made available to the former category, which would, e.g.,
    - abridge the syllabus applicable to them in the remaining school years;
    - provide special assessments in national examinations;
    - make them indistinguishable from other students in their examination/leaving/character certificates;
    - provide special services such as mental health and career guidance counselling; and
    - quotas, subsidies, etc. in tertiary or technical training institutes entered into after secondary education

## *Restructuring schools*

- Abolish the national/provincial classification of schools so that all schools are administered at the provincial level in accordance with the relevant national policies on education.

- The Ministry of Education of the central government should lead the formulation of national policies on education and oversee their implementation by provincial education administrations, while also institutionalising the appropriate feedback loops between provincial implementation and national formulation of all national-level education policies (such as by building the relevant monitoring and evaluation mechanisms into all appropriate levels of the education system).

- Schools where the transition to online education has been successful should explore possibilities of releasing teachers so they may be restationed where highly experienced teachers are the most needed (as an interim measure).

- All schools should be restructured and reclassified as primary, lower secondary or upper secondary, so that they include only classes from grades 1-5, 6-9 and 10-13, respectively. Existing schools with more classes than this classification allows should be sectioned into new schools.

- All students of primary school age should have access to a school within 4km of their home. Lower secondary schools should be established in every area so as to absorb students from 2 to 3 primary schools at a time. Secondary education should include varied streams so that students can choose among academic, vocational, technical, and creative learning.

- Upper secondary schools should ensure the efficient distribution of resources by specialising in specific streams instead of aspiring to provide all streams at the same school. The provincial education administration should ensure, however, that all students of the relevant age have adequate access to any upper secondary stream of their choosing.

- Competition among students to enter "popular" schools should be eliminated by requiring all students to enter the nearest secondary school offering their chosen stream. The minimum physical resources required by all schools at the primary level, as well as at the level of each stream at secondary level, should be determined officially by the Ministry of Education. Reallocating resources from schools in excess of it to schools with deficits should be a general objective of the national education policy. Where necessary and appropriate, provincial education administrations should devise resource sharing mechanisms across multiple schools.

- Provincial education administrations should officially designate "elite schools" as such, and earmark positions in such schools exclusively to students demonstrating merit and potential while being from the worst-off socioeconomic backgrounds (e.g., students of schools included in the National School Meal Programme). A test focussing on emotional intelligence, general aptitude, and essential learning competencies should be used in selecting students from low-income backgrounds to attend such elite schools. A learning support grant should be provided to all children in low-income families from grade 1 onwards, possibly combined with family-based subsidies and grants.

- While students with most merit among the economically worst-off are redirected to elite schools, the government should ensure that the regular schools available to such communities are brought in line with national education policy in terms of quality of service. Schools predominantly serving such communities should be specifically identified, and timelines for their development should be specified.

## *Learning content and assessment*

- Learning content, i.e., syllabi at all levels of general education, should be reformed to reflect contemporary goals of education, including the development of skills and attitudes in addition to knowledge. Multiple streams of education should be made available at the secondary level, so that students showing differing levels of aptitude have access to a standard of education appropriate and useful to them—e.g., students should be able to choose between an advanced, theoretical education in mathematics, a vocational track, etc. The multiple streams of education available should correspond with multiple pathways to graduation from

secondary school as well as to entering tertiary education or vocational/technical training.

- Examinations should be abolished entirely at the primary level. At every level, summative assessment should be abandoned in favour of formative assessment, and student learning should be assessed on an ongoing basis, rather than through cumulative, written term tests. Assessments should focus on students' ability to apply learned knowledge rather than to cram information and repeat it in written examinations. Student assessment should focus not only on writing skills but also speaking, presenting, and other creative forms of expression. Students should be assessed by panels as far as possible.

- The Grade 5 scholarship should be abolished. Students may be required to face a special assessment when nearing the completion of their primary education, which is not competitive and focusses on identifying each student's strengths, weaknesses, and general competences. Students from extremely poor backgrounds may face a special test to qualify to enter "elite schools" earmarked for them. However, such a test, too, should be broad-based and multi-pronged so as to allow students with diverse capacities to demonstrate their merit in their own light.

- Ordinary and Advanced Level examinations, especially where the latter is the basis for entering public universities, should give adequate weight to students' non-academic skills such as extra-curricular activities, community work, and sports. Qualifying examinations should allow students to choose an assessment system suited to their skills and chosen stream. In general, however, the education policy should promote a shift *away* from Ordinary and Advanced Level examinations towards a formative approach.

## *Teachers and principals*

- All teachers should be offered an attractive benefits package, including by making it one of the highest paid professions in the country.

- An independent Education Administration Service Commission should be established to ensure that all appointments, transfers, and disciplinary control of members of the education sector are treated in a fair and transparent manner.

- The teaching service should be recognised as the premier service among all education services and a minimum level of experience teaching in classrooms should be a qualifying criterion to enter the other education services such as the Sri Lanka Education Administrative Service (SLEAS), Principals' Service, etc.

Vacancies in such services should be fulfilled by recruiting members of the teaching service who possess the necessary experience and exposure.

- The academic staff of schools should be appointed only on the basis of need. The existing principal and teacher grading system should be reformed to accord parity of recognition (or higher) to principals and teachers of primary, rural, or under-resourced schools with other principals and teachers. Staff serving in primary, rural, or under-resourced schools should receive special support and incentives for their service, and principals and teachers of more senior service grades should be drawn to such schools. They should be specially recognised in their performance appraisals, especially as relevant to transfers and promotions.

- Teachers and principals should be trained in contemporary advancements in teaching methods on a periodic basis. They should be consulted and involved in all reforms related to teaching methods. New teaching methods involving costly technology should not be implemented unless all schools have access to the necessary resources. However, special categories of schools, such as schools for disabled children and schools teaching students may resort to special technologies provided that all schools within such categories enjoy an equal level of access to such technologies.

- Guidance counsellors and mental health counsellors should be stationed in every school. Guidance counsellors should maintain individualised relationships with students, monitoring their progress through school, and assist them in navigating the multiple pathways available to them as students in the new education paradigm.

If Sri Lankan children are to be prepared for the challenges of the future and the drivers of growth, educational reforms are essential. While the pandemic has strained the education system, the financial crisis has created additional challenges. It is vital that education is prioritised and not subjects to the inevitable cost-cutting, austerity measures that loom on the horizon.